**இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.பெ.கா.வேணுசேகரன், B.Sc.,**

ந.க.அ1/2788/2018 நாள்:15.06.2018

பொருள்: கிராம நிருவாகம் - தகுதிகாண் பருவம் - ஆற்காடு வட்டம் - கிராம நிருவாக அலுவலர்கள் - கிராம நிருவாக அலுவலர் பணியமைப்பில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக முடித்தது – தகுதிகாண் பருவம் முடித்ததாகக் கருதி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1.அரசு கடித எண்.36150/பணி 7(1) /2017-2, நாள்:22.11.2017
2.சென்னை முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.பணி 5(1)/17494/2017, நாள்:12.02.2018
3.ஆற்காடு வட்டாட்சியரின் கடிதம் எண்.நக.அ4/77/2018, நாள்.14.05.2018.

-0-

**ஆணை:**

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் முறையே அரசு மற்றும் முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் கடிதத்தில் கிராம நிர்வாக அலுவலர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை தொடர்பாக தனியர்கள் 5 வருட காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட சிறப்பு தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்கள் தேர்ச்சி பெறும் நாளினை அடிப்படையாகக் கொண்டு தகுதிகாண்பருவம் விளம்புகை செய்ய வேண்டிய இனங்களில் சம்பந்தப்பட்ட நியமன அலுவலரே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 33-ன்படி தகுதிகாண் பருவத்தினை நீட்டித்தும் மற்றும் விளம்பிட ஆணையினை வெளியிடவும் நடவடிக்கை எடுக்க தெளிவுரை வழங்கப்பட்டதற்கிணங்க வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை கோட்டம், ஆற்காடு வட்டத்தில் பணிபுரியும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட 14(பதினான்கு) கிராம நிருவாக அலுவலர்களும், அவரவர் பெயருக்கு எதிரில் கலம் 3-ல் குறிப்பிட்டுள்ள தேதியில் தகுதிகாண் பருவத்தை ஆரம்பித்தும், மூன்றாண்டு காலத்தில் தொடர்ச்சியாக இரண்டாண்டு பணிக்காலத்தினை கலம் 5-ல் குறிப்பிட்டுள்ள தேதியில் (வரையறுக்கப்பட்ட சிறப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளன்று) முடித்துள்ளதால், கலம் 5-ல் கண்ட தேதியில் தகுதிகாண் பருவ காலத்தை மனநிறைவு அளிக்கும் விதத்தில் முடித்துள்ளதாக விளம்பியும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | கிராம நிர்வாக அலுவலர்களின் பெயர் (திருவாளர்கள்) | தகுதி காண் பருவம் ஆரம்பித்த நாள் | தகுதிகாண் பருவத்திற்கு சேராத காலம் | தகுதி காண் பருவம் முடித்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மு.சக்கரவர்த்தி | 04.11.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 2 | சி.ஹரி கிருஷ்ணன் | 14.05.2015 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | N.சுரேஷ் | 06.03.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 4 | C.பிரேமா | 11.05.2015 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 5 | ம.சீனிவாசன் | 13.05.2015 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 6 | த.வெங்கடேசன் | 04.11.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 7 | நா.பாரதி | 04.11.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 8 | வே.கனிமொழி | 13.05.2015 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 9 | ம.கவிதா | 19.10.2015 முற்பகல் | — | 18.10.2017 பிற்பகல் |
| 10 | ர.பூங்குழலி | 19.10.2015 முற்பகல் | — | 18.10.2017 பிற்பகல் |
| 11 | சி.கார்த்திகேயன் | 04.04.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 12 | எல்.ஞானவேலு | 05.04.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |
| 13 | அ.ரம்யா | 16.10.2015 முற்பகல் | — | 15.10.2017 பிற்பகல் |
| 14 | ம.திருச்செந்தூர் வேலன் | 04.11.2013 முற்பகல் | — | 18.07.2017 பிற்பகல் |

இவர்களது தகுதிகாண் பருவம் முடித்தது குறித்தான ஆணையினை சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆற்காடு வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இத்துடன் மேற்கண்ட கிராம நிருவாக அலுவலர்களின் 14(பதினான்கு) பணிப்பதிவேடுகள் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலையும் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகிறது.

இணைப்பு: 14 பணிப்பதிவேடுகள்

5/17

15.6.18

வருவாய் கோட்டாட்சியர்,
இராணிப்பேட்டை.

பெறுநர்

15/6/18

சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் - ஆற்காடு வட்டாட்சியர் மூலமாக,

நகல்: வட்டாட்சியர், ஆற்காடு. சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்ப வேண்டியது.

நகல்: வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் -
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.